## இறுதிச் செபம்:

விண்ணகத் தந்தையே இறைவா, அனைத்து குடும்பங்களையும் ஒன்றிணைத்து அன்பு, மற்றும் பரஸ்பர ஆதரவின் நிறைவான ஒற்றுமையில் வைத்தருளும். குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினிடமும் புரிதல் மற்றும் பாசத்தின் உணர்வை விதைத்தருளும்.
அன்னை மரியே,, அன்புத் தாயே, உலகில் உள்ள அனைத்து குடும்பங்களும் தீமைகள் துன்பங்களிலிருந்துப் பாதுகாக்கப்படவும், மன்றாடும். புனித யோசேப்பே, வாழ்வின் எல்லா தேவைகளிலும் எங்களுக்காக மன்றாடி உதவியருளும். புனித சுவக்கீன் அன்னம்மாளே, உமது பேரன் இயேசுவைப் பின்பற்றி உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையை நடத்த எல்லா குடும்பங்களையும் ஊக்குவித்தருளும். அன்புள்ள இயேசுவே, எங்கள் குடும்பத்திற்காக, உம் மனிதப்பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளின் இறைவேண்டல்களைக் கேட்டருளும். எங்கள் இல்லங்கள் அமைதி, தூய்மை, நிபந்தனையற்ற அன்பு மற்றும் உம்மீது உறுதியான நம்பிக்கை திகழும் ஆலயமாக திகழட்டும். இந்த மன்றாட்டுகளை உம்முடைய புனிதமான மற்றும் விலைமதிப்பற்ற பெயரால் கேட்கிறோம். ஆமென்.

## முடிவு பாடல்:

### நிறைவுப்பாடல்

இணைந்திடுவோம் இறைமக்களே இயேசுவின் சந்நிதியில்
சுமைகளைத் தாங்கி சுகமே கொடுக்கும் இயேசுவின் பலியினிலே
இணைவோம் இயேசுவின் பலியினிலே (2)
கூடிடுவோம் குடும்பமாய் கூடிடுவோம்
மாறிடுவோம் இறைசமூகமாய் மாறிடுவோம்

1. மூவொரு கடவுளர் முடிவில்லா பிரசன்னம்
குடும்பமாய் இணைக்கின்றது
நம்மைக் குடும்பமாய் இணைக்கின்றது (2)
பலியினில் கலந்து உறவினில் இணைய
நம்மையே அழைக்கின்றது
இன்று நம்மையே அழைக்கின்றது - கூடிடுவோம் ...

2. இயேசுவில் வாழ்ந்திட வாழ்வையே பலியாக்க
பாதை காட்டுகின்றது - புதிய பாதை காட்டுகின்றது (2)
சோதனை வென்று சாதனை படைக்க
ஆற்றல் தருகின்றது நமக்கு ஆற்றல் தருகின்றது
கூடிடுவோம் ...

**Published by:**
Peninsular Malaysia
Pastoral Team

**Email:**
api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

மார்ச் 2025

# அதிச சிந்தனை

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

# குடும்பம் (உடன் பயணம்)

## குடும்ப மதிப்பீடுகளையும் உறவையும் பேண அழைப்பு

**அறிமுகம்:** இந்த 2025 மார்ச் மாதத்தில் குடும்பத்தில் கவனம் செலுத்துவோம். கடவுளின் வார்த்தையின்படி எவ்வாறு நாம் குடும்ப மதிப்பீடுகள் மற்றும் உறவுகளைப் பேணிக்காத்து வளர்ப்பது? எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில், தியாகம் நிறைந்த அன்பு, மற்றும் அதிகாரத்திற்கு மரியாதை என ஒரு கிறிஸ்துவ குடும்பத்தில் கடவுள் விரும்பும் மதிப்பீடுகளைப் பற்றி படம்பிடித்துக் காட்டுகிறது. இதுவே குடும்பத்தின் உறவுகளை ஆழப்படுத்தவும் வலுவூட்டவும் உதவும். ஒரு கிறிஸ்துவ குடும்பத்தில் அன்பும் மரியாதையும் என்பது, கிறிஸ்துவின் திருஅவையுடனான தொடர்புகளைப் பிரதிபலிக்கும் செயல்பாட்டு மனப்பான்மைகளாகும். கிறிஸ்து திருஅவையை அன்பு செய்ததுபோல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அன்புசெய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது நிபந்தனையற்ற, தன்னலமற்ற மற்றும் தியாகம் நிறைந்த அன்பு. இதுபோல குழந்தைகள், தங்கள் பெற்றோரை மதிக்கவும், கீழ்ப்படியவும் கடவுளால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும் ஞானத்தையும் ஏற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். செயல்நடவடிக்கையில் இந்த மதிப்பீடுகள், அமைதி, ஒற்றுமை மற்றும் பரஸ்பர வளர்ச்சியின் சூழலை வளர்க்கின்றன. அங்கு ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் கடவுள் அவர்களைப் படைத்த நபராக மாறுவதற்கு மதிப்புமிக்கவர்களாகவும், அன்புசெய்யப்படுபவர்களாகவும், வழிநடத்தப்பட்டவர்களாகவும் உணர்கிறார்கள்.



## தொடக்கச் செபம்: (அனைவரும்)

விண்ணகத் தந்தையே, குடும்பம் என்னும் பரிசுக்காக நாங்கள் நன்றிகூறுகிறோம். எங்கள் குடும்பங்களை உமது அன்பில் வளர்க்க எங்களை வழிநடத்தும். எங்கள் குடும்பங்கள் உமது அன்பையும் அருளையும் பிரதிபலிக்கட்டும். உம்முடைய அருளால் எங்கள் குடும்பங்கள் ஒற்றுமை மற்றும் மற்றும் தெய்வீக அன்பின் சரணாலயமாக திகழட்டும். எங்கள் இல்லங்களில் வாழ்வோர் ஒருவருக்கொருவர் உறவுகளை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தவும் கிறிஸ்துவ குடும்பத்தின் விழுமியங்களை வளர்த்திடவும் எங்களுக்கு உதவியருளும். நிபந்தனையின்றி அன்பு செய்யவும், மதிக்கவும், அருளோடு பணிசெய்யவும், நேர்மையையும் மன்னிப்பையும் நிலைநிறுத்தவும் உதவியருளும். உமது வார்த்தை எங்கள் வாழ்க்கையில் காணப்படவும், இதன் விளைவாக உமது அரசு இங்கு இப்போது உண்மையாக திகழவும் அருள்தாரும். இவையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## தொடக்கப்பாடல்:

எத்துணை நன்று எத்துணை நன்று
அத்தனை பேரும் ஒன்றி வாழ்வது
எத்துணை நன்று

1. ஒரு கொடி கிளையாய்
நாமிருக்கின்றோம் எத்துணை நன்று
அந்த ஒரே திருச்சபையில்
நாமிருக்கின்றோம்
ஒரே குடும்பமாய் நாமிருக்கின்றோம்
இன்று ஒரேவித அழைப்பை நாம்
பெற்றுக்கொண்டோம்

2. புதியதோர் உலகம் கண்டிடுவோமே
எத்துணை நன்று
அதில் புதுமை வாழ்வை
அடைந்திடுவோமே
பிரிவினை பிணக்குகள்
தீர்த்திடுவோமே
என்றும் இறைவனில் ஒன்றாய்
வாழ்ந்திடுவோமே

## உரையாடல்

தொழில்நுட்பமும், வேகமான வாழ்க்கையும் பெரும்பாலும் முன்னுரிமை பெறும் இன்றைய நவீன உலகின் பரபரப்பில் வலுவான கிறிஸ்துவ குடும்பங்களை உருவாக்குவது நிலைத்தன்மை, நம்பிக்கை, அன்பு மற்றும் தார்மீக அடித்தளத்திற்கு மூலைக்கல்லாக மாறுகிறது.

அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பு ஆகியவை கிறிஸ்துவ விழுமியங்களின் அடிப்படைத் தூண்களாகும். இது தனிநபர்களை உணர்வு ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் செழித்துவளரக்கூடிய சூழலை உருவாக்குகிறது.

ஒரு கிறிஸ்துவ குடும்பத்தின் பிணைப்புகளை வலுப்படுத்தும் ஒரு ஆற்றல்வாய்ந்த கருவியாக இறைவேண்டல் உள்ளது. மேலும் கூட்டு இறைவேண்டல்களை குடும்ப உறுப்பினர்களாக செய்யும்போது, குடும்ப உறுப்பினர்கள் தங்களின் மகிழ்ச்சி, கவலைகள் மற்றும் நன்றியுணர்வை ஒருவருக்கொருவரோடும் மற்றும் கடவுளோடும் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கிறது. ஒரு குடும்பமாக விவிலியம் வாசிப்பது, கிறிஸ்துவ கொள்கைகளைப் பற்றிய பகிர்வு புரிதலை வளர்க்கிறது. மற்றும் சமகால வாழ்க்கையின் சவால்களை வழிநடத்த வழிகாட்டுகிறது.

நன்னெறி குணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சமமான முக்கியத்துவம் வாய்ந்தது. நேர்மை, நன்றியுணர்வு மற்றும் இரக்கத்தின் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்குக் கற்பிப்பது , பெரும்பாலும் ஒழுக்கமற்ற தெளிவற்ற உலகில் செல்ல அவர்களுக்கு இது தேவையான கருவிகளாகும்.

குடும்ப மதிப்பீடுகளையும் உறவுகளையும் வளர்ப்பதற்கான 7 வழிகள்

- நிபந்தனையற்ற அன்பை நடைமுறைப்படுத்துங்கள்: உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அன்பைக் காட்டுங்கள். அவர்களின் செயல்களின் அடிப்படையில் அல்ல; மாறாக கடவுளின் படைப்பாக அவர்களின் உள்ளார்ந்த மதிப்பின் அடிப்படையில்
- மரியாதையைக் கற்பித்து அதை நிலைநிறுத்துங்கள்: பெற்றோருக்குரிய அதிகாரத்துக்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். ஏனெனில் இது கடவுளின் அதிகாரத்திற்கான நமது மரியாதையின் பிரதிபலிப்பாகும்.
- நம்பிக்கையை வளர்த்தெடுங்கள்: நம்பிக்கை வெளிப்படையாக விவாதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் சூழ்லை வளர்த்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் கிறிஸ்துவுடனான அவர்களின் தனிப்பட்ட உறவை ஊக்குவியுங்கள்.
- நேர்மையையும் வெளிப்படைத்தன்மையையும் ஊக்குவியுங்கள்: நேர்மையோடும் திறந்த மனதோடும் குடும்பத்தில் உரையாடவும், நம்பிக்கை மற்றும் நெருக்கத்தையும் வளர்த்திடுங்கள்.
- பணி செய்யும் மதிப்பை வளர்த்திடுங்கள்; குழந்தைகள் பிறருக்கு பணி செய்யவேண்டிய முக்கியத்துவத்தைக் கற்றுக்கொடுங்கள். பணியைப் பெற அல்ல, பணிசெய்யவே வந்தேன் என்னும் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்.
- அருளையும் மன்னிப்பையும் பேணுங்கள்; குடும்பத்தில் மன்னிப்பு வழங்கும் கலாச்சாரத்தை வளர்த்திடுங்கள். நமக்கு கடவுள் தரும் மன்னிப்பைப் பற்றி சிந்தியுங்கள்.
- ஒன்றாக இறைவேண்டல் செய்யுங்கள்: குடும்ப வாழ்வில் இறைவேண்டலை வழக்கப்படுத்துங்கள். கடவுள் மீதான உங்கள் கூட்டு நம்பிக்கையை வலுப்படுத்துங்கள்

மேற்குறிப்பிட்ட வழிகளில் எது உங்களுக்கு மிகவும் சவால் மிக்கது என்பதை உங்கள் அதிச உறுப்பினர்களோடுப் பகிர்ந்துகொள்ளுங்கள்

## இறைவார்த்தை

### எபேசியர் 6: 1-4

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. "இதனால் நீ நலம் பெறுவாய்; மண்ணுலகில் நீடுழி வாழ்வாய்" என்பதே அவ்வாக்குறுதி. தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்துவாருங்கள்.

## தனிப்பட்ட சிந்தனைக்கு:

- இறைவார்த்தையை வாசித்து, தூய ஆவியாரிடம் ஞானத்தைக் கேளுங்கள்
- எதேனும் ஒரு வார்த்தை அல்லது வசனம் உங்கள் உள்ளத்தை தொட்டதா?
- தூய ஆவியார் உங்களைத் தூண்டியதைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளுங்கள்

